தொகுதி- ௬௰ :: பகுதி-௭, ௮, ௯ Vol. 60 :: No.7,8,9

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1995
சோபகிருது — ஐப்பசி to மார்கழி
1964—OCTOBER to DECEMBER

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 10—4—65)

உள்ளுறை

1. தமிழுக்குத் தொண்டுபுரிந்த கிறித்தவர்கள்
அ. திருமலைமுத்துசுவாமி, எம். ஏ., எம். லிட். 101

2. தொல்காப்பியத்தில் ஒரு நூற்பாவின் விளக்கம்
பண்டித சித. நாராயணசாமி 106

3. உள்ளுறையும் இறைச்சியும்
பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் 109

4. இரண்டாம் இல்லறம்
ஆ. துரைக்கண்ணு 112

5. வேள்விக்குடிச் செப்பேடுகள்
இர. பன்னீர்செல்வம், எம். ஏ. 119

6. தமிழ்வினை முற்று
மா. இளையபெருமாள், எம். ஏ., எம். லிட். 128

7. ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை 150-ஆவது ஆண்டு நிறைவு விழா 130

8. மதிப்புரை 131

9. ஆசிரியருக்குக் கடிதம் 132

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர், தமிழவேள் திரு. பீ. டி. இராசன், B. A., Bar-at-law.

பொறுப்பாசிரியர்கள்:

2. திரு. வீ. சண்முகசுந்தரம், M. A., B. L.
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

3. திரு. கி. பழநியப்பன்,
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-1.

4. திரு. இரா. வே. நாராயணன், எம். ஏ.
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-1.

5. பண்டித வித்துவான் மு. உலகநாதன்
விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-1.

உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி ௬0
Vol. 60

திருவள்ளுவர் ஆண்டு 1995
சோபகிருது—ஐப்பசி to மார்கழி
1964 October to December

பகுதி எ, அ, கூ
No. 7, 8, 9

தமிழுக்குத் தொண்டு புரிந்த கிறித்தவர்கள்

அ. திருமலை முத்துசுவாமி, M. A., M. Litt., B. T., D. L. S.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

என்னும் நூலாகும். இந்நூல் தமிழில் எழுந்த முதல்பெருங் கதை (நாவல்) என்று சொல்லப்படுகின்றது. இக்கற்பனைக் கதை நகைச்சுவை நிரம்பிப் படிப்போர் மனதைப்பற்றி இழுக்கும் பான்மை உடையது, மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பதற்கும் நல்ல பழக்கங்கள் பரவுவதற்கும் இந்நூல் வழிகாட்டுகின்றது. கதைத்தலைவனுகிய பிரதாபனது கள்ளங்கபடமற்ற உள்ளம் நம் கருத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது. மதிநலம் வாய்ந்த மங்கையராக இவனது தாயாகிய சுந்தரத்தம்மாளும், மனையாளாகிய ஞானம்பாளும் விளங்குகின்றனர்.

இந்நூல் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. ஞானசுந்தரி எனும் நாவலும், சத்தியவேத கீர்த்தனை எனும் இசைப்பாட்டும் இப்பெரியாரால் எழுதப்பட்டனவாகும்.

கிருட்டினப்பிள்ளை:

இவர் நெல்லைமாவட்டத்தைச்சேர்ந்த ரெட்டியார்பட்டியில் வேளாளர் குலத்தில் தோன்றித் தமிழ்நூல்களை எல்

லாம் நன்றாகக் கற்றுத் தமிழ் இலக்கியத்திலும், இலக்கணத் திலும் நிறைந்த புலமை பெற்று விளங்கினர். இவர் வைண வராவார். இவரது தகுதியினை அறிந்த கால்டுவல் ஐயர் இவரைச் சாயர்புரக் கல்லூரியில் தமிழாசிரியராக நியமித் தார். அங்கு அவர் தமிழ்ப்பணி செய்துவரும் பொழுது வைணவப் பற்று மெள்ள அவரைவிட்டு நீங்கியது. கிறித்து காட்டிய அன்புப் பாதை அவர் உள்ளத்தை ஈர்த்தது. அந் நிலையில் அவர் கிறித்தவ நூற்களை நன்கு கற்று விரைவில் மனந்திரும்பி கிறித்தவராக மாறினர். ஆங்கிலத்தில் சான் பனியன் என்பவர் இயற்றிய "Pilgrim's Progress" என் னும் நூலின் தமிழ்மொழி பெயர்ப்பாகிய மோட்சப் பிரயா ணத்தைப்படித்த கிருட்டினப்பிள்ளை தமிழில் அதைத்தழுவி 'இரட்சணிய யாத்திரீகம்' எனும் காவியத்தைப் பாடிமுடித் தார். இக்காவியத்தின் தலைவர் கிறித்து நாதரே. பாவத்தில் படிந்த உயிர், கவலையுற்று வாடி ஆன் மரட்சகராகிய கிறித்து நாதனது அருளால் நித்திய சிவனைப் பெற்றுப் பேரானந்தம் அடையும் தன்மையை இக்காவியம் எடுத் துரைக்கின்றது. அருள் வள்ளலாகிய கிறித்து காட்டிய பொறுமையும் கருணையும் வாய்ந்தவரே உண்மைக் கிறித் தவர் ஆவர் என்ற தம் கருத்தினை இந் நூலாசிரியர் இந் நூலில் நன்கு வலியுறுத்திக் கூறுகின்றார். இத்தகைய சிறந்த காவியத்தைப் பாடிய இவ்வாசிரியர் கிறித்துவைப் போற்றி மனமுருகப் பாடுதற்கேற்ற திருப்பாசுரங்கள் பல பாடியுள் ளனர்.

வேத நாயக சாத்திரியார்:

இப்பெரியார் திருநெல்வேலி நகரில் தோன்றி தொன் னூறு ஆண்டுகள் தமிழ்நாட்டில் வாழ்ந்து தொண்டுபுரிந் தவர் ஆவர். பராபரன் மாலை, ஞானக்கும்மி, ஆதியானந்தம் முதலிய நூல்கள் இவர் இயற்றிய இனிய தமிழ் நூல்களா

கும். இறைவன் உலகத்தையெல்லாம் படைத்த பான்மையை வியந்து இவர் பாடிய பாடல் ஞானத்தச்சன் நாடகம் என்னும் பெயரால் வெளிவந்துள்ளது. மேலும் கர்த்தராகிய ஏசுநாதரைப் பாட்டுடைத்தலைவராகவைத்துப்'பெத்தலேம் குறவஞ்சி' என்னும் பெயரால் இவர் ஒரு நாடகமும் எழுதியுள்ளார். ஏசுநாதர் பெருமையைக் குறவஞ்சியின் வாயிலாக வெளிப்படுத்தும் தமிழ்நூல் இது ஒன்றேஆகும்; சென்னைப்பட்டணப் பிரவேசம் என்ற நொண்டி நாடகமும் இவரால் எழுதப்பெற்றதே. ஏற்றம் இறைத்துப் பணிசெய்யும் ஏழைமக்களுக்கு ஏற்றப்பாட்டின்வாயிலாக ஞானத்தை ஊட்ட விரும்பிய வேத நாயகர் அவ்வகையில் நூறுசெய்யுட்கள் இயற்றியுள்ளார். அந் நூலின்பெயர் ஞான ஏற்றப் பாட்டு என்பதாகும். இறுதியில் இப்பெரியார் கிறித்தவ வேதாகமங்களின் சாரத்தைப் பாடிச் சாத்திரியார் என்ற பட்டத்தையும் பெற்றார்,

கிறித்தவர் தொகுத்த அகராதிகள்:

முற்காலத்தில் சமணப்புலவர்கள் நிகண்டு நூல்கள் இயற்றியதைப் போன்றே பிற்காலத்தில் கிறித்தவப் புலவர்கள் நமக்கு அகராதி நூற்கள் தொகுத்து உதவினர். தமிழ்ச் சொற்களை அகரமுதலாக வரிசைப் படுத்திப் பொருள் விளக்கும் நூலே அகராதியாகும். இத்தகைய நூலை முதன் முதலில் தமிழகத்திற்கு அளித்தபெருமை வீரமாமுனிவரையேசாரும். இவர்தொகுத்த சதுர அகராதி,பெயர்,பொருள், தொகை, தொடை என்னும் நான்கு பகுப்புடையதாய் விளங்கியதால் அப்பெயர் பெற்றது. அளவிற்கு சிறிய இந் நூல் மிகவும் அருமை வாய்ந்ததாகும். இது கி.பி. 1779-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது. இந்நூலின் நெறியைக் கடைப்பிடித்து 45 ஆண்டுகளுக்குப் பின்னர் பாப்ரீசியர் என்பவர் செர்மானிய லூதரன் மடத்தைச் சேர்ந்தவர். இவ்

வகராதியில் இலக்கியச் சொற்களுடன் பேச்சு வழக்கில் உள்ள பல சொற்களும் சேர்க்கப்பட்டுள்ளன தமிழில் வழங்கும் வடமொழிச் சொற்கள் உடுக்குறியிட்டுக்காட்டப் பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு சொல்லின் பொருளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கப்பட்டிருப்பதால் ஆங்கி லேயருக்குப் பெரிதும் பயன்பட்டது. அடுத்து ராட்லர் என்னும் பெரியவர் பல்லாண்டுகளாக உழைத்து 37,000 தமிழ்ச் சொற்களைத் தொகுத்து அவற்றை நான்கு பாகங் களாக வகுத்து அச்சிடும்பொழுது அவர் வாழ்நாள் முடியவே, டெய்லர் என்னும் அறிஞர் அவர் எடுத்த பணி யைத் தொடர்ந்து செய்யவே, அது 1400 பக்கங்கொண்ட பேரகராதியாக வெளிப்பட்டது. அதற்கு இருபதாண்டுகட் குப் பின்னர், பெர்சிவல் முதலிய அறிஞர் பலர் பலகாலமா கத்திரட்டிய வற்றை அமெரிக்கச் சங்கத்தார் சார்பில் வின்சுலோ என்பவர் வெளியிட்டார். இவ்வாறு வளர்ந்து வந்த தமிழகராதியில் மேலும் பல சொற்களை எல்லாம் சேர்த்து வின்சுலோவின் அகராதியைப் பெருக்கியும் புதுக் கியும் வெளியிட சாந்தலர் என்னும் ஆங்கில அறிஞர் ஒரு திட்டம் வகுத்துச் சென்னை அரசினருக்கு அனுப்பினர். மத்திய அரசினரும் அதன் அவசியத்தை உணர்ந்து நூறு யிரம் ரூபாய் செலவிட அனுமதி தந்தனர். இப்பேரகராதி யின் பதிப்பாசிரியராகச் சாந்தலரே ஒன்பதாண்டுகள் பணிபுரிந்தார். பின்னர் அதன் பொறுப்பைச் சென்னைப் பல்கலைக் கழகம் ஏற்றுக்கொண்டு அப்பணியினை முற்றுப் பெறச் செய்யவே அப்பேரகராதி ஏழு பெருந் தொகுதியா கத் தமிழ் லெக்சிகன் என்னும் பெயரோடு வெளிவந்தது. இவ்வகராதியில் 100,000 சொற்கள் காணப்படுகின்றன. இவ்வாறு அகராதி தொகுத்த காரணமாகத் தமிழ்மொழி யின் சொல்வளத்தைப் பெருக்கிய வீரமாமுனிவர், பாப்ரீ சியர், ராட்லர், டெய்லர், வின்சுலோ, சாந்தலர் முதலிய

அறிஞர்க்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். தமிழ்நாட்டுப் பழமொழிகள் அனைத்தையும் திரட்டித்தந்த பெருமையும் இவர்களையே சாரும். பெர்சிவல், லாசரசுஐயர் என்ற இரு பெரியவர்களும் தமிழ்நாட்டில் வழங்கிய பழமொழிகளை எல்லாம் சேகரித்துப் பெரும் நூலாக வெளியிட்டனர். இவ்வாறு சொல்லாலும்செயலாலும் கிறித்தவத் தொண்டர்கள் தமிழ் வாழ, வளர வழிசெய்தனர்.

———

மதிப்புரை

[திருவிடைமருதூர்க் கலம்பகம்:- கிடைக்குமிடம்; ஸ்ரீமகாலிங்கசுவாமி தேவஸ்தானம், பக்கங்கள் **64**]

திருஎவ்வுளூர் திரு. இராமசாமிச் செட்டியார் அவர்களால் இயற்றப்பட்ட இக் கலம்பகம் தொண்ணூற்றாறு பிரபந்த வகைகளுள் ஒன்று. கனியினும் கட்டிபட்ட கரும்பினும் இனிக்கின்ற நனிதமிழில் கலம்பக உறுப்புக்களோடு இந் நூல் மருதூரில் குடிகொண்ட ஸ்ரீ மகாலிங்கமூர்த்தியைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது. கலம்பக உறுப்புக்களாகி பதினெட்டுக்கும் மேற்பட்டு இந்நூல் ஐம்பதுஉறுப்புக்களைக் கொண்டிலங்குகின்றது. கிளிப்பயிற்று, சீரையார், குரவை, சல்லாபம், பார், வினவுத்தரம் என்பனபோன்ற புதியனபுகுதல் இந்நூலில் நூலாசிரியரால் புகுத்தப்பட்டுள்ளது. நூற்றைந்து செய்யுட்களைக்கொண்ட இந்நூல் அகத்துறையும் புறத்துறையும் கொண்ட அரியபாடல்களால் ஆக்கப்பட்டுள்ளது. இந்நூலுக்கு சித்தாந்த சைவமணி த. ச. மீனுட்சிசுந்தரம் அவர்கள் உரைகண்டிருப்பது நூலின் மூலக்கருத்தை அறிய உதவுகிறது. யாவரும் படித்துப் பயன்பெறுக.

[கருணைவான் தேன் கலந்தது:- கிடைக்குமிடம்: திருவாவடுதுறை ஆதீனம்]

திருவாசகத்தேனின் தித்திப்பை யாவரும் அறியச் செய்வதே இச் சிறுநூலின் பிறப்பாகும். திருவாவடுதுறையாரின் அன்பு கருணைவான் தேன்கலந்து இனிக்கின்றது.தேனின் சுவையினைச் சொன்னல் புரியுமோ? உண்டு மகிழுங்கள். உடலுக்கும் நல்லது. உளத்திற்கும் நல்லது.

—புலவர் மு. உலகநாதன்

தொல்காப்பியத்தில் ஒரு நூற்பாவின் விளக்கம்

பண்டித: சித. நாராயணசாமி,
அறுபத்துமூவர்மடம், திருவையாறு,

"இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்காறல்ல செய்யுளாறே"

இந்நூற்பாத் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் கிளவியாக்கம் என்னும் பகுதியில் உள்ளதொரு நூற்பா வாகும் என்பது புலவர்களுக்குப் புலனாகும்.

இது பண்புச் சொல்லோடு கூடிய பெயர்ச்சொற்கள் நிகழு முறையை யுணர்த்துவதாகும்.

இதற்குச் சேனாவரையர் எழுதிய வுரையின் கருத்தை விளக்கும் வாயிலாக விளக்கஞ்செய்ய முற்படுகின்றனன்.

சேனாவரையர் உரையை விளக்கும்போது இக்காலத்தார் திருத்திய திருத்தம் திருத்தமாகா. உரையை அறியாமையால் பிழைபடத் திருத்திய செயலாகும் என்பதும் புலப்படுமென்க.

இந்நூற்பாவால் பெயர்ச்சொற்கள் வறிதே வாராமல் பண்பை யுணர்த்தும் சொல்லோடு கூடிவருமானால், அவை தம்மாலுணர்த்தப்படும் பொருளுக்கி னமான பொருளுண் டெனக் காட்டி அப்பண்புச் சொல்லாற் சிறப்பிக்கப்பட்டு வரும் என்பதும், அவ்வாறு காட்டிச் சிறப்பிக்கப்படாது வருவனவுமுள. அவை வழக்கில் வாரா. செய்யுளாயின் வரும் என்பதும் பெறப்பட்டன.

சிறப்பிக்கப்படல்=ஒரு பொருளை யுணர்த்துதற்குரிய தாக ஆக்கப்படல், எதனுலாக்கப்படுமெனில் அடுத்து வரும் பண்புச் சொல்லாலாக்கப்படுமென்க.

பண்புகொள் பெயர்கள் இனங்காட்டுமெனவே அவை யினப்பொருளிருத்தலைக்கருதியே பண்புச் சொற்களாலடுக்கப்பெறுமென்பதும், அவ்வாறடுக்கும் பண்புச்சொற்களால் இனப்பொருளுண்டெனக் காட்டி, அவற்றிற்குரியன வாகாம னீங்கி அவ்வப் பண்புச்சொற்களால் வரையப்பட்டு அவ்வப் பண்புடைய பொருள்களை யுணர்த்துவனவாகும் என்பதும் போதருமென்க.

வரையப்படல்=அகப்படல்; சிறப்புச்சொல்லாக ஆக்கப்படுதல், அதாவது ஒரு பொருளுக்குரியதாக ஆக்கப்படுதலாம். இனம் உடைய பொருள்களில் ஒவ்வொருபொருள்களை எடுத்துங்கூறும் பெயர்கள் அவ்வப்பொருள்களை யுணர்த்துவதற்காக அவ்வற்றுக்குரிய பண்புகளை யுணர்த்துஞ் சொற்களாலடுத்து வரப்பெறும் என்பதாம்.

செந்தாமரை என்னும் பண்புகொள் பெயர்ச் சொல்லானது தன்னேடடுத்த செம் என்னும் பண்புச்சொல்லால் வெண்டாமரை யாகிய இனப்பொருளுண்டெனக் காட்டி, அவ்வெண்டாமரையை யுணர்த்மாமனீங்கி அப்பண்புச் சொல்லாலேயே வரையப்பட்டு (செந்தாமரைப்பொருளை யுணர்த்துவதற்குரியதாக ஆக்கப்பட்டு) அச்செம் என்னும் பண்புச்செல்லாலுணர்த்தப்படும் செந்நிறப்பண்பையுடைய தாமரைப் பொருளை யுணர்த்துவதாக ஆதலையறிக.

உணர்த்தாமனீங்கி எனவே பண்புச்சொல் உணர்த்தா மனீக்குவதாகுமென்க.

செந்தாமரை என்பதுபோல, செஞ்ஞாயிறு என்னும் பண்புகொள் பெயர்ச்செல்லானது தன்னேடடுத்துவரும் செம் என்னும் பண்புச்சொல்லால் வேறு இனப் பொருளா

கிய ஞாயிறுண்டெனக்காட்டி அதற்குரியதாகாமனீங்கி அச்செம் என்னும் பண்புச்சொல்லால் வரையப்பட்டு (அகப்படுத்தப்பட்டு) அச்செங்கிற ஞாயிற்றுப்பொருளை யுணர்த்துவதாக ஆதலில்லை என அறிக.

[செந்தாமரை என்னும் பண்புகொள் பெயர்ச்சொல் தாமரை என்னும் சொற்போலப் பலபொருள்களுக்குப் பொதுச் சொல்லாக நில்லாமல் செம் என்னும் பண்புச் சொல்லால் அடுக்கப்பெற்றமையால் சிறப்புச் சொல்லாக ஆகி (ஒரு பொருளுக்குரிய சொல்லாகி) வெண்டாமரைப் பொருளுண்டென இனங்காட்டிச் செங்கிறத்தாமரைப் பொருளை யுணர்த்துவதாக ஆதல் போலச் செஞ்ஞாயிறு என்னும் பண்புகொள் பெயர்ச்சொல், ஞாயிறு என்பது பொதுச் சொல்லாகாமையால் அச்செம்மென்னும் பண்புச் சொல்லால் சிறப்புச்சொல் ஆதலுமில்லை. அவ்வாறு சிறப்புச்சொல் ஆகாமையால் இனங்காட்டிச் செஞ்ஞாயிற்றுப் பொருளை யுணர்த்துவதாகவுமில்லை என்க,]

பண்புகொள் பெயர்ச்சொற்கள், இனங்காட்டி அப்பண்புடைய பொருளை யுணர்த்தினுல் அப்பண்புச் சொற்களால் சிறப்பிக்கப்பட்டனவாகும். இன்றேல் சிறப்பிக்கப்படாதன வாகும் என்பதாம்.

சிறப்பிக்கப்படுவதையே விசேடிக்கப்படுவது என எழுதுகின்றனர் எனக்காண்க.

ஞாயிறு என்ருல் பலவகை ஞாயிறின்மையால் அச்சொல் பலவினப் பொதுச்சொல்லாகாமல் செங்கிற ஞாயிற்றையே யுணர்த்துஞ் சிறப்புச் சொல்லாகும். ஆனதால் செஞ்ஞாயிறு எனப்பண்புச்சொல்லிட்டுமொழியவேண்டுவதில்லை. பண்பிட்டுச் செஞ்ஞாயிறு என மொழியப்படின் அது வேறு ஞாயிறுண்டென இனங்காட்டிச் செஞ்ஞாயிற்றுப் பொருளையுணர்துவதாக வருதலின்ருகலால் செஞ்ஞாயிறெனப் பண்புகொள் பெயராகவருதல் பயனின்றியதாகும். அப்பயனின்றியதாகவரினும் வேறு பயனுடையதாக வருதலாற் கொள்ளப்படுமென்பதாம்.

வேறு பயன் செய்யுட்கண் அணிகுறித்துநிற்றல், அணி, தன்மையணியாகும். (தொடரும்)

உள்ளுறையும் இறைச்சியும்

பேராசிரியர், ஆ சிவலிங்கனார், மயிலம்

(31—12—64-ல் வெளியான இதழின் 37-ம் பக்கத் தொடர்ச்சி)

நச்சினார்க்கினியர்

1 உடனுறை:

உள்ளுறை ஐந்து என்பன உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என்பனவாம். இவை கருப்பொருளை நிலைக்களமாகக் கொண்டுவரும். அவற்றுள் உடனுறை என்பது தன்னோடு உடன் உறையும் கருப்பொருளால் பிறிதொரு பொருள் தோன்றுமாறு கூறப்படுவதாம். இதனை இறைச்சி என்றும் கூறுவர். அவ்வுடனுறை இரண்டுவகைப்படும்.

(1) சொல்லவேண்டிய பொருளைச் சார்த்தி உடன் உறையும் கருப்பொருளைக் கூறி அதனால் வேறு ஒரு பொருளைத் தெரிவிப்பது ஒருவகை உடனுறையாம்.

இயற்கைப் புணர்ச்சிக் காலத்தில் தலைவன், "நினைப் பிரியேன்; பிரியின் ஆற்றேன்' என்று சூளுற்றுச் சொன்னான் அவன் சில நாட்களாகத் தலைவியிடம் வாராமலேயிருந்தான் அதனால் அவள் வருந்திக்கொண்டிருந்தாள். அவளை ஆற்றுவிப்பதற்காகத் தோழி, தலைவனைப் பழிப்பவள்போலப் பேசினாள்"

தான் சொன்ன சூளுறவைக் காவாமல் பொய்த்துவிட்டான் தலைவன்; அப்படிப்பட்டவன் மலையானது விளங்கும் அருவிநீரை யுடையதாக இருந்ததே! பொய்த்தவன் மலை அருவிநீரின்றிப் பொலிவிழந்து கெடாமல் நல்ல அருவிநீரை யுடையதாகஇருந்ததே!" என்றாள். இக்கருத்தமைந்தவரிகள்,

"இலங்கு மருவித்தே யிலங்கு மருவித்தே
வானின் றிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை" (கலி 41.)

இப்படிச் சொன்னதில், தலைவன் இருக்கும் மலையில் அவனுடன் இருப்பது அருவி. சொல்லவேண்டிய பொருள் 'தலைவன் சூள் பொய்த்தான்' என்பது. அதைச் சார்ந்த தலைவனுடன் உறையும் அருவிநீர் சொல்லப்பட்டது. அருவி மலை நிலக் கருப்பொருள். அக்கருப்பொருளாகிய அருவி கூற வேண்டிய பொருளாகிய 'சூள் பொய்த்தான்' என்பதையே நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது எப்படியென்றால், சூள் பொய்த்தான் மலையாயிருந்தும் அருவி திகழ்கின்றதே! என்னே கொடுமை!' என நம்மை நினைக்கவைக்கின்றது. இப்படி நினைக்குமாறு அமைந்த கருப்பொருளே இறைச்சி எனப்படும்; அதுவே உடனுறையாம்; அந்நினைப்பே பிறிதொரு பொருளாம்; அப்பொருளே உடனுறை உள்ளுறை யெனப்படும்.

(2) இனி யிரண்டாவது உடனுறையுள்ளுறை காண்போம். முன்சொன்னவாறு கருப்பொருள் வேறு ஒரு பொருளை அறிவதற்குத் துணை செய்வதில்லாமல் அக்கருப் பொருளினுள்ளேயே வேறு ஒருபொருள் தோன்றுமாறு அமைவது இரண்டாவதாம்.

தலைவன் தலைவியை மணந்து கொள்ளாமல் காலம் நீட்டித்தான். அவனைத்தோழி வரைந்து கொள்ளும்படி வற்புறுத்த எண்ணினள் எண்ணியவள், 'தலைவனே' என விளிக்கத்தொடங்கினள் அப்போது, அவன் உறையும் நாட்டை நினைவுபடுத்தி விளித்தாள்.

"கன்றுண்டது தன்னிடம் பாலுண்ணத் தான் வீட்டு
முற்றத்தில் காயவைத்த தினையைப் பெண்யானை
உண்ணும் படியாக உள்ள காட்டுக்குத் தலைவனே"

என்று விளித்தாள். இவ்விளியில் உள்ள உடனுறையும் கருப்பொருள்கள் கன்று பிடி, தினை என்பனவாம். இவற்றின் உள்ளே உறையும் பொருளாவது, "தன்கன்றுக்குப் பயன்பட்டுப் பிறர்க்கு உயிரைக் கொடுக்கின்ற தினையைப் பிடி, தான் உண்டு அழிவு செய்கின்றாற்போல, நீ, நின்கருமம் சிதையாமல் பார்த்து எமக்கு உயிராகிய இவளைத்துயர் உறுத்தி எம்மை இறந்துபடுவித்தல் ஆகாது" என்பதாம். இதில் தினையை அழித்தல்போல் எம்மை யிறந்துபடச் செய்தாய் என்றுகூறாமல், 'இறந்துபடச் செய்தல் ஆகாது' என்று கூறுதலின் உள்ளுறையாகாமல் இறைச்சியாயிற்று (இதுபற்றி ஆராய்ச்சியில் விரிவாகக் காணலாம்)

உடனுறை யிரண்டனுள் முன்னது 'இறைச்சி' என்றும் பின்னது 'இறைச்சியிற் பிறக்கும் பொருள்' என்றும் கூறப்படும்.

உவமம்:

இது உள்ளுறை உவமம் எனவும் ஏனையுவமம் எனவும் இரண்டுவகைப்படும். உள்ளுறையுவமமாவது, ஒருபுலவனால்தன் உள்ளம் கருதிய ஒருபொருள் வெளிப்படையாகக் கூறப்படாமல் வெளிப்படையாகக்கூறப்பட்ட பொருளில் கேட்போர் அதை உணருமாறு அமைக்கப்படுவதாம் வெளிப்படையாகக் கூறிய பொருள் உவமையாகவும் அதன் உள்ளே உறையும் பொருள் பொருளாகவும் கொள்ளவேண்டும். இதனைக் கீழ்வரும் பாடலில் காண்போம்:

வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்ந் தூர்புகுந்த வரிவண்டு
ஓங்குயர் எழில்யானைக் கனைகடாம் கமழ்நாற்றம்
ஆங்கவை விருந்தாற்றப் பகலல்கிக் கங்குலான்
வீங்கிறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கம்பு கதுப்பினுள் அரும்பவிழ் நறுமுல்லைப்
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டுதாம் மரீஇய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர்
(தொடரும்) (கலி. 66)

இரண்டாம் இல்லறம்

ஆ. துரைக்கண்ணு, உப்பிலிபாளையம், கோவை-5.

மாதவி பரத்தையர் குலத்துப் பிறந்தவளே யாயினும் பரத்தை யல்லள்; 'அணிமேகலையார் ஆயிரங் கணிகைய ரிடை' வாழ்ந்தவளே யாயினும் கணிகை யல்லள் அவ்வாறு யின், கண்ணகியைப் பிரிந்த கோவலன் பிரிவு, பரத்தையிற் பிரிவு ஆமோ?

"தாரும் மாலையும் மயங்கிக் கையற்றுத்
தீராக் காதலில் திருமுகம் நோக்கி..." [2: 55, 56]

என்பதாலும்,

"யாண்டுசில கழிந்தன இற்பெருங் கிழமையிற்
காண்டகு சிறப்பின் கண்ணகி தனக்கு [2: 89, 80]

என்பதாலும், கண்ணகி-கோவலன் ஆகியோரது இல்லறம் செம்மையுறவே இலங்கிற்று என்பது தெளிவாம்.

இத்தகு மனைமாட்சியினின்றும் நீங்கி, மாதவிபாற் கோவலன் சென்றது, சற்றும் எதிர்பாரா நிகழ்ச்சியேயாம்- 175 வரிகள் கொண்ட 'அரங்கேற்று காதை'யில் 163 வரிக ளான் 'ஆடல் பாடல்' பற்றியே உரைக்கப்பட்டுள்ளது. இறுதியாக உள்ள பன்னிரு வரிகளான், நகர நம்பியர் திரிதரு மறுகில்,

"நூறுபத் தடுக்கி யெட்டுக் கடைநிறுத்த
வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை
மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கு..."

என வயந்தமாலை கூறி நின்றனளாக, பெருவணிகனாய கோவலன் மாலை பெற்று, மாதவி மனை புகுந்து, தன்மனை மறந்து, மாதவிபால் 'விடுதலறியாவிருப்புற்றனன்' என்பது பெறப்படும். பரத்தையிற் பிரிவினைக் கண்ணகிக்கு விளைக்குமாப்போல் பரத்தையென மாதவியை நாடிச் சென்ற கோவலன், அவள்பால் விடுதலறியா விருப்புற்று, 'பரத்தைதையிற்பிரிவு' எனும் நிலையினை மறந்தனன் போலும்!

எது எவ்வாறாயினும், கோவலனின் இல்லக் கிழத்தியாகவே 'மானெடுங்கண் மாதவி' இலங்கினள் என்பதும் கோவலற்கு வளங்கொழுவிய 'இரண்டாம் இல்லறத்'தை ஈந்தனள் என்பதும் 'சிலம்பினை' நோக்குழித் தெற்றெனப் புலனாம்.

இல்லறத்து இனிதிருக்கும் தலைமகன் காதற்பரத்தையை நாடித் தலைவியைப் பிரிதல் பண்டைய மரபு. இல்லறத் தலைமகனின் ஒழுகலாறுகளுள் இஃதும் ஒன்றாம் தலைமகளாய கண்ணகியுடன் இல்லறம் பூண்ட கோவலன், தலைமகனின் ஒழுகலாறுகளுள் ஒன்றாய 'பரத்தையைச்சேர்தல்' என்னும் ஒழுகலாற்றினை மேற்கொண்டனனோ இல்லையோ, தலைமகளாய மாதவியுடன் வாழ்வைப் பிணித்தகாலை, தலைமகற்குரிய அவ்வொழுக்கத்தின் பாற்பட்டு, 'பரத்தையிற் பிரிவினை' மாதவிக்கு விளைத்தனன் என்பது உண்மை.

''காமக் களிமகிழ் வெய்திக் காமர்
பூம்பொதி நறுவிரைப் பொழிலாட் டமர்ந்து
நாண்மகி ழிருக்கை நாளங் காடியிற்
பூமலி கானத்துப் புதுமணம் புக்குப்
புகையுஞ் சாந்தும் புலராது சிறந்து
நகையா டாயத்து நன்மொழி திளைத்துக்
குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு

திரிதரு மரபிற் கோவலன் போல
இளிவாய் வண்டினொ டின்னிள வேனிலொடு
மலய மாருதந் திரிதரும்...'' [5: 194-203]

என்றமையான் 'பூத்தோறும்சென்று அவற்றுள் தோய்ந்து மணமும் மகரந்தமும் ஏற்றுவரும் களிவண்டு போன்றும், யாண்டுந் துழவி நுழைந்துவரும் தென்றல் போன்றும் இயல்புடையவன் கோவலன் என்பதும், மாதரைப் புல்லி யமையான் மார்பிடைக் கிடந்த சாந்தினொடு வருகின்றவன் என்பதும் பெறப்படும்.

''காதற் கொழுநனைப் பிரிந்தல ரெய்தா
மாதர்க் கொடுங் குழை மாதவி...'' [5: 189, 190]

என்னும் வரிகள் சிலேடையாக மாதவியையும் குருக்கத்தியையும் குறிக்கும் என்பர்: ''மாதவிமேற்சொல்லுமிடத்துத் தான் காதலிக்கப்பட்ட கொழுநனைப் பிரிந்து வேறுபாட்டால் அலர் உறுத அழகிய வளைந்த மகரக்குழையை யுடைய மாதவி' என்றும், கண்ணகி பிரிந்து அலரை எய்துதலால் அலரெய்தாத மாதவி யென்றார்'' என்றும், ''குருக்கத்திமேற் சொல்லுமிடத்து எல்லாருங் காதலிக்குங் கொழுவிய நனையாந் தன்மையை விட்டு முதிர்ந்து அலராகாத வளைந்த அழகிய தளிரை உடைய மாதவி'' என்றும் 'அடியார்க்கு நல்லார்' பொருளுரைப்பர்.

''காதற் கொழுநனை ......'' எனவரூஉந் தொடரினைச் சிலேடையாகக்கொண்டுநயங்காணலாமேயன்றி,மானெடுங் கண் மாதவியையே அத்தொடர் குறிக்கும்எனல் பொருந்தாதாம். என்னை? ஆசிரியர் மறுகின் பெற்றியையே உரைக்க வந்தனராகலானும், முல்லை மல்லி மயிலை தாழிக்குவளை செங்கழுநீர் ஆகியனவற்றைப் பின்வைத்துக் கூறினராகலானும், ஈண்டு மாதவி என்றது குருக்கத்தியையே குறிக்கும்

என்க இனி, இம்மாதவி (குருக்கத்தி), அம்மாதவிபோற் 'காதற் கொழுநனைப் பிரிந்தலரெய்தா மாதவி' என்றனராக லான், மானெடுங்கண் மாதவி தன் காதற்கொழுநனைப் பிரிந்து அலரெய்தியவளாதல் வேண்டும். ''குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு திரிதரு மார்பிற் கோவலன் ...'' என்று அடுத்துவருகின்ற தொடர், இக்கருத் திற்கு நல்லரண் செய்யும்.

''நெறியின் நீங்கியோர் நீர்மையே னாகி'' [14: 17]

என்றும்,

''வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக் கொன்றேற்கு நன்னெறி யுண்டோ?'' [16:63-66

என்றும் கோவலன் கூறுமாற்றான் அவனது நெறிபிறழ்ந்த தொடர்பினை அறியலாம். அவன் பாடிய கானல்வரிப் பாக் களின் பொருள் நோக்கவும், பிற மாதரை நயந்தனன் எனத் தெளியலாம். மற்றும்,

''மாலை வாரா ராயினு மாணிழை
காலை காண்குவம்......'' [8: 115, 116]

என மாதவி ஆற்றுப் படுத்திக் கொள்ளலான், இதற்கு முன்னரும் பிரிவுகள் நிகழ்ந்துள என்பது புலனாகும்.

எனவே, இதுகாறும் கண்டனவற்றான், மாதவியிடத்து வாழ்ந்தனான்று, இல்லறத் தலைமகற்குரிய ஒழுகலாறு களுள் ஒன்றாய பரத்தையிற் பிரிவினைக் கோவலன் கொண் டனன் என்பதும், பிரிவுற்ற மாதவி, அதனால் துன்புற்ற னள் என்பதும் தெளிவு.

இனி, மாதவியின் மனைமாட்சியை நோக்குவோம்.

''தான்தீது இலள்எனத் தளர்ச்சி நீங்கி
என்தீது என்றே எய்திய வுணர்ந்து......'' [94, 95]

எனப் 'புறஞ்சேரி இறுத்தகாதை'யில் கூறப்படலான், மாதவியை மாண்புடையவள் எனக் கோவலன் ஏற்றுக் கொண்டமை விளங்கும் எனவே பின்னர் வரும் 'ஊர்சூழ் வரி'யில்,

''நெறியின் நீங்கியோர் நீர்மையனாகி''

என்றும், 'கொலைக்களக் காதை'யில்

' வறுமொழி யாளரொடு வம்பப் பரத்ரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக் கொண்றேற்கு நன்னெறி யுண்டோ?''

என்றும் கோவலன் கூறலான். 'நெறியின் நீங்கியோன், வறுமொழியாளர், வம்பப் பரத்தர்' ஆகியோர் பட்டியலில் மாதவி இடம் பெற்றிலள் என்பது அங்கை நெல்லியாம்.

''அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை...'' [16:71-73]

எனக் கண்ணகி உரைத்தமை நோக்க, மனைவியொடு கணவன் பிரியாதிருந்துழிச் செய்யும் மனையறங்கள் விளங்கும். கண்ணகி உரைத்த இவ்வறங்களனைத்தும், கண்ணகி-கோவலன் இல்லறத்தில் நிகழ்ந்தனவோ இல்லையோ, மாதவி–கோவலன் இல்லறத்தில் நிகழ்ந்துள.

''அணிமே கலையா ராயிரங் கணிகையர்
மணிமே கலையென வாழ்த்திய ஞான்று

மங்கல மடந்தை மாதவி தன்னெடு
செம்பொன் மாரி செங்கையிற்..."
பொழிந்தான்கோவலன்.

அவ்விழவிற் கொடைபெற வந்த முது மறையோனைக் கொல்லவந்த கடக் களிற்றினைக் கருணைமறவனுய்க் கோவலன் அடக்கியதும்; பார்ப்பனனால் கைவிடப்பட்ட அவன் மனைவியின் அருந்துயர் நீக்குதற்பொருட்டு, நல்வழிப் படுத்தும் செல்லாச் செல்வனுய் உறுபொருள் கொடுத்ததும்; பூதத்திடமிருந்து ஒருவனை விடுவித்தற் கெனத் 'தன்னுயிர் கொண்டு இவனுயிர் தா'வென இரந்ததும், பூதத்தால் அவ்விளைஞன் இறப்புற, அவன் தாயையும் கிளைஞரையும் இல்லோர் செம்மலாய்ப் பல்லாண்டு புரந்ததுமாகிய அருளறத்தின் பாற்பட்ட கோவலனின் செயல்களனைத்தும் மாதவியோடு அவன் வாழ்ந்தகாலையே நிகழ்ந்துள எனவே கண்ணகி கூறும்,

"அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்த்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்......"

ஆகிய இல்லற மாட்சிக்குரிய நற்கூறுகள், மாதவியோடு கோவலன் வாழ்ந்த வாழ்விலே சிறப்புற்று விளங்குதல் கண்கூடு.

வறுமொழியாளர், வம்பப் பரத்தர் சேர்க்கையால் போற்ரு ஒழுக்கம் புரிந்த கோவலனை,

"..நும்
பெருமகள் தன்னெடும் பெரும்பெயர்த் தலைத்தாள்
மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்
முந்தை நில்லா முனிவிகந் தனனு

3

அற்புளஞ் சிறந்தாங் கருண்மொழி யளைஇ
ஏற்பா ராட்ட யானகத் தொளித்த
நோயுந் துன்பமு ரொடிவது போலுமென
வாயன் முறுவற்கவ ருள்ளகம் வருந்தப் [16: 73-81]

எனக் கண்ணகி கடிந்தனள். நல்லதோர் இல்லறத் தலைவியாகிய கண்ணகி, கோவலன் தனக்குத் தீங்கிழைத்தனன் எனக் குறியாது, தனது மாமன் மாமியர்க்குத் தீங்கிழைத் தானெனக் குறித்தனள் இஃதேபோன்று, கண்ணகி கூறற்கு முன்னரே,

"குரவர்பணி யன்றியும் குலப்பிறப் பாட்டியோ
டிரவிடைக் கழிதற்கு........" [13: 86, 90]

எனக் கோவலற்கு மாதவி யெழுதிய திருமுகத்தின் மூலம், "இருமுது குரவர்க்குப் பணிபுரிதலும் மறந்தீரோ?" என்றனளாகலின், கண்ணகி போன்றே தூய இல்லக்கிழத்திற்குரிய உளப்பாங்கு மாதவிக்கும் இருத்தல் விளங்கும். வம்பப் பரத்தையளாய் மாதவி இருந்திருப்பின், இருமுதுகுரவர் பற்றி இல்லக் கிழத்திக்குரிய உரிமையோடு குறித்திராள்.

இவையனைத்திற்கும் மேலாய், தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் 'இல்லறவியலில்' இனிதுரைக்கும் மக்கட் பேறும் மாதவிமாட்டே கோவலனுக்குக் கிட்டிற்று.

எனவே, 'நெறியின் நீங்கியோர், வறுமொழியாளர், வம்பப் பரத்தர்' ஆகியோர் பட்டியலில் இடம்பெருத மாதவியோடு கோவலன் வாழ்ந்த ஞான்று, இல்லறத் தலைமகனுக்குரிய ஒழுகலாறுகளுள் ஒன்ருய பரத்தையைச் சேர்தலைக் கோவலன் கொண்டதும். அதனுல் மாதவி துன்புற்றதும்: அவன் மனையறங்கள் பல புரிந்ததும், மகப்பேறு உற்றது மாகியனவற்றை நோக்குழி, கோவலன் மாதவீயோடு தூய இல்லறமே நடாத்தியுள்ளான் என்பதும்,இந்த 'இரண்டாம் இல்லறமே' கண்ணகியோடு வாழ்ந்த முதல் இல்லறத்தினும் சிறப்புடைத்தாய் முழுமை பெற்றுள்ளது என்பதும் நன்கு விளங்கும்.

வேள்விக்குடிச் செப்பேடுகள்

இர. பன்னீர்செல்வம், எம். ஏ., திருவனந்தபுரம்.

['வேள்விக்குடிச் செப்பேடுகள்' இந்தியக் கல்வெட்டு பதினேழாவது தொகுதி பதினாறாவது எண்ணுடன் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. [Epigraphica Indica] Volume XVII-No. 16.] இதை ஆங்கில எழுத்தாக்க முறையில் [Transliteration] பதிப்பித்தவர் எச். கிருஷ்ண சாஸ்திரி, பி. ஏ. ஆவர் 'மர்ரே' நூல் வெளியீட்டுக் குழுவினரும் 'சாசனமாலை' என்ற சிறு நூலில் இதை வெளியிட்டுள்ளனர். இவ்விரண்டு பதிப்புக்களும் சாசனத்தை வெளியிட்டு நாடறியச் செய்தல் வேண்டும் என்ற நோக்குடையன. ஆகலின், அவர்கள் இச் சாசனத்தின் செய்யுள் நடையினை நோக்கிற்றிலர்.

எட்டாவது நூற்றாண்டுத் தமிழ்ச் செய்யுள் கல்வெட்டுக்களிலும், செப்புப் பட்டயங்களிலும் இடம்பெற்றிருந்த தன்மையினை, இச் சாசனவாயிலாக நன்கு உணரலாம். செப்பேட்டின் தமிழ்ச் செய்யுளின் நலத்தை ஆராய விழைவோர்க்கு இச் செப்பேடுகள் பெரும்பயன் விளைவிப்பன. இதில் காணும் போர் நிகழ்ச்சிகள்-அரச பரம்பரைகள் முதலானவற்றை நோக்கினால் கி. பி. 6 முதல் 8-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த பாண்டியரது வரலாற்றையும், அன்றையத் தமிழ் நாட்டின் நிலையினையும் நன்கு அறியலாம்.

இவ்வாறான பலதெளிவுகளை விளக்குவான் வேண்டியே இச்சாசனம் பல பிரிவுகளையும், சிறு தலைப் புகலையும் கொண்டு வெளிவருகிறது. முதலில், சங்ககாலப் பாண்டி

யன் எனக் கூறப்படுகின்ற பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிஎன்பான் வேள்விசெய்ததற்காககொற்கைக்கிழான்நற்கொற்றனுக்குப் பாகனூர் என்ற ஊரை வேள்விகுடி எனப் பெயரிட்டுக் கொடுத்ததையும், பின்னர் 'களப்பிரர்' என்ற ஓர் இனத்தவர் நாட்டைக் கைப்பற்றிக்கொள்ள, அந்தத் தானமும் தவிர்க்கப்பட்டது என்பதையும் கூறுகிறது.

அடுத்த பகுதி கி. பி. 575 முதல் 770 வரை ஆண்ட பாண்டியர்களின் பரம்பரையையும், சேர சோழ பல்லவ சாளுக்கியர் முதலானவர்களுடன் செய்த போர்கள், செய்த தானங்கள் முதலானவற்றையும் விளங்கக் கூறுகிறது. இப் பகுதி வரலாற்று இன்றிமையாத பகுதி எனலாம்.

பின்னர் நெடுஞ்சடையனது மூன்றுவது ஆட்சி ஆண்டில் (கி. பி. 770) காமக்காணி நற்சிங்கன் என்பவன், இந்தப் பழைய கொடைக்கு உரிமை கோரி, அரசனது ஆணையின்படி, சான்று காட்ட, அரசனும், முன்னோர் கொடுத்தபடியே உரிமைகளோடும் தாரைவார்த்துக் கொடுக்கின்றுன் என்ற செய்தியினையும் காணலாம்.

அடுத்து, அதன் எல்லையினை வரையறுக்கின்ற செய்தியும், அதற்கான உரிமைகளை வழங்குகின்ற செய்தியும் காணப்படுகின்றன. இதைச் செயல்படுத்தித் தந்தவன் நெடுஞ்சடையனது அமைச்சன்; கரவந்தபுரத்து மாறங்காரி என்பவன், என்ற செய்தியை 'ஆணத்தி-மாறங்காரி' என்ற பகுதியில் காணலாம்.

முடிவுரையில், தானத்தைப் பகிர்ந்து கொள்ளவேண்டியவர்கள் அளவு முதலிய செய்திகளையும், இதை எழுதினுன் பெயரையும் காணலாம்.

இந்தப் பதிப்பின் தலையாய நோக்கம் செப்பேட்டுச் செய்யுள் நலத்தினைத் தெளிவுபட வெளிப்படுத்துவதே ஆகும். அந்த நோக்கம் ஈடேறத் தமிழ்ப் பேருலகின் நோக்கும், அன்பும், ஆதரவும் துணையாக நிற்கும் என்று எதிர்பார்க்கிறேன்.]

முன்னுரை:

1 கொல்யானை பலவோட்டி கூடாமன்னர் குலாம் தவிர்த்த
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியாதிராஜனால்
2 நாகமாமலர்ச்சோலை நளிர்சினைமிசை வண்டலம்பும்
பாகனூர்க் கூற்றம் என்னும் பழனக் கிடக்கை நீர்நாட்டுச்
3 சொற்கண்ணாளர் சொலப்பட்ட சுருதி மார்க்கம் பிழையாத
கொற்கைகிழான் நற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்கக்
4 கேள்வி அந்தணாளர் முன்பு 'கேட்க' என்று எடுத்துரைத்து
வேள்வி சாலை முன்பு நின்று 'வேள்விகுடி' என்று அப்பதியைச்
5 சீரோடு திருவளரச் செய்தார்; வேந்தன் அப்பொழுதேய்
நீரோடு அட்டிக் கொடுத்தமையால் நீடு புக்தி துய்த்தபின்
6 அளவரிய ஆதிராஜரை அகல நீக்கி அகலிடத்தைக்
களப்ரன் என்னும் கலி அரைசன் கைக்கொண்டு இறக்கிய பின்,

பிற்காலப் பாண்டியர் பரம்பரை

[கி. பி. 575 முதல் 700 வரை ஆட்சிசெய்தவர்கள்]

கடுங்கோன்

7 படுகடல் முளைத்த பகுதிபோல பாண்டியாதிராஜன் வெளிற்பட்டு
விடுகதிர் அவிரொளி விலகவீற்றிருந்து வேலைசூழ்ந்த வியலிடத்து
8 கோவுங் குறும்பும் பாவுடன் முருக்கிச்
9 செங்கோல் ஓச்சி வெண்குடை நீழல்
தங்கொளி நிறைந்த தரணி மங்கையைப்
10 பிறர்பால் உரிமை திறவிதின் நீக்கித்
11 தன்பால் உரிமை நன்கனம் அமைத்த
12 மானம் போர்த்த தானை வேந்தன்
13 ஓடுங்கா மன்னர் ஒளிநகர் அழித்த
கடுங்கோன் என்னும் கதிர் வேற் றென்னன்

மாறவர்மன் அவனி சூளாமணி

14 மற்றவர்க்கு மகனாகி மஹீதலம் பொது நீக்கி மலர் மங்கையொடு
மணன் அயர்ந்து
அற்றம் இல் அடல் வேற்றானை ஆதிராஜன் அவனி சூளாமணி
15 எத்திறத்தும் இகல் அழிக்கும் மத்தயானை மாறவர்மன்;

சேந்தன் செழியன்

மற்றவர்க்கு,
16 மருவினிய ஒருமகனாகிய மண்மகளை மருக்கடிந்து
விக்ரமத்தின் வெளிப்பட்டு விலங்கல் வேல் பொறி
வேந்தர் வேந்தன்
17 சிலத் தடக்கைக் கொலைக் களிற்றுச்
18 செழியன் வானவன் செங்கோற் சேந்தன்

மாறவர்மன்

மற்றவர்க்குப்
19 பழிப்பின்றி வழித் தோன்றி
20 உதயகிரி மத்யமத்து உறுசுடர் போல
21 தெற்றென்று திசை நடுங்க மற்றவன் வெளிப் பட்டு
22 சூழியானை செலவுந்திப் பாழி வாய் அமர் கடந்து
23 வில்வேலிக் கடல் தானையை நெல்வேலிச் செரு வென்னும்
24 விரவி வந்து அடையாத பரவரைப் பாழ் படுத்தும்
25 அறுகால் இனம் புடைதினைக்கும் குறுநாட்டவர் குலங்கெடுத்தும்
26 கைந் நலத்த களிறுந்திச் செந் நிலத்துச் செருவென்றும்
27 பார் அளவுந் தனிச்செங்கோல் கேரளனைப் பலமுறையும்
28 உரிமைச் சுற்றமோடு அவர் யானையும் புரிசைம் மதில் புலியூர்
29 பகல் நாழிகை இறவாமை இகலாழியுள் வென்று கொண்டும்
30 வேலாழியும் வியன் பறம்பும் ஏலாமை சென்றெறிந்து அழித்தும்
31 ஹிரண்ய கர்ப்பமும் துலா பாரமும் தரணி மிசைப் பல செய்து
32 அந்தணர்க்கும் அசக்கதர்க்கும் 'வந்தனைக' என்று ஈத்தளித்து
33 மகரிகை அணி மணி நெடு முடி
அரிகேசரி அசமசமன் ஸ்ரீ மாற வர்ம்மன்;

கோச்சடையன்

34 மற்றவர்க்கு மகனாகிக் கொற்றவேல் வலனேந்திப்
35 பொருதூருங் கடற் றானையை மருதூருண் மாண்பழித்து
36 ஆயவேளை அகப்பட 'ஏ' யென்றுமை எறிந்தழித்து
37 செங்கொடியும் புதான் கோட்டும்
செருவென்றவர் சினந்தவிர்த்துக்
கொங்கலரும் நறும் பொழில் வாய்க்
குயிலோடு மயிலகவும்
மங்கலபுரம் என்னும் மகா நகருண்
மகாரதரை எறிந்தழித்து
38 அறை கடல் வளாகம் பொதுமொழி அகற்றிச்
39 சிலையும் புலியும் கயலும் சென்று
நிலையமை நெடுவரை இடவயிற் கிடாய்
40 மண்ணினிதாண்ட தண்ணளிச் செங்கோல்
41 தென்ன வானவன் செம்பியன் சோழன்
மன்னர் மன்னன் மதுர கரு நாடான்
42 கொன்னவின்ற நெடுஞ்சுடர் வேல்
கொங்கர் கோமான் கோச்சடையன்
43 மற்றவர்க்குப் புத்திரனாய் மண்மகளது பொருட்டாக
மத்தயானை செல வந்தி மானவேல் வலன் ஏந்திக்
44 கடுவிசையால் எதிர்ந்தவரை நெடுவயல்வாய் நிகர் அழித்துக்
45 கருவடைந்த மனத்தவரைக் குறுமடைவாய்க் கூர்ப்பழித்து
46 மன்னிக் குறிச்சியும் திருமங்கையு முன்னின்றவர் முரண் அழித்து
47 மேவலோர் கடற்றானையோ டேற்றெதிரேய் வந்தவரைப்
பூவலூர்ப் புறங்கண்டும்
48 கடும்புரிசை நெடுங்கிடங்கின் கொடும்பாளூர்க் கூடார்
கடும்பரியுங் கருங்களிறுங் கதிர்வேலிற் கைக்கொண்டுஞ்
49 (செழும்புரவிப்)பல்லவனைக் குழும்பூருட் தேசழிய
50 எண்ணிறந்த மால் களிறும் இவுளிகளும் பல கவர்ந்தும்
51 தரியலராய்த் தரித்தவரைப் பெரியலூர்ப் பீடழித்தும்
52 பூவிரியும் பொழிற் சோலைக் காவிரியைக் கடந்திட்டு
53 அழகமைந்த வார்சிலையின் மழகொங்கம் அடிப்படுத்தும்

54 ஈண்டொளிய மணி இமைக்கும் எழில் அமைந்த நெடும்புரிசைப்
பாண்டிக் கொடு முடி சென்றெய்திப் பசுபதியது பன்ம பாதம்
பணிந்தேத்திக்
55 கனகராசியுங் கதிர்மணியும் மனமகிழக் குடுத்திட்டுங்
56 கொங்கரவங் நறுங்கண்ணிக் கங்கராஜனொடு சம்பந்தஞ் செய்தும்
57 எண்ணிவந்தன கோ சஹஸ்ரமும் ஹிரண்ய கர்ப்பமும்
மண்ணின்மிசைப் பலசெய்து [துலாபாரமும்
58 மறை நாவினோர் குறை தீர்த்தும்
59 கூடம், வஞ்சி, கோழி என்னும் மாடமாமதில் புதுக்கியும்
60 அறைகடல் வளாகம் குறையாது ஆண்ட
61 மன்னர் மன்ன(ன்)றென்னவர் மருகன்
62 மான வெண்குடை மான்றேர் மாறன்;

பராந்தக நெடுஞ் சடையன்

63 மற்றவற்கு மகன் ஆகி மால் உருவின் வெளிற்பட்டுக்
கொற்றம் மூன்றுடன் இயம்பக் குளிர்வெண் குடை மண் காப்ப
64 பூமகளும் புலமகளும் நாமகளும் நலனேத்தக்
65 கலி அரைசன் வலிதளரப் பொலிவினொடு வீற்றிருந்து
66 கருங்கடல் உடுத்த பெருங்கண் ஞாலத்து
67 நாற்பெரும் படையும் பாற்படப் பரப்பிக்
68 கருதாது வந்தெதிர் மலைந்த காடவனைக் காடடையப்
69 பூவிரியும் புனற்கழனிக் காவிரியின் தென் கரைமேல்
70 தண்ணுகம் மலர்ச்சோலைப் பெண்ணு கடத்து அமர் வென்றுந்
71 தீவாய் அயில் ஏந்தித் தினைத்தெதிரேய் வந்திறுத்த
ஆய்வேளையும் குறும்பரையும் அடல் அமருள் அழித்தோட்டிக்
72 காட்டுக் குறும்பு சென்றடைய நாட்டுக்குறும்பிற் செருவென்றும்
73 அரைகடல் வளாகம் ஒருமொழிக் கொளீஇய
74 சிலைமலி தடக்கைத் தென்ன வானவன்
அவனேய் ஸ்ரீவரன் ஸ்ரீமனோஹரன்
75 சினச்சோழன் புனப் பூழியன்
76 வீதகல் மஷன் வினய விஸ்ருதன் விக்ரம பாரகன் வீரபுரோகன்
77 மருத் பலன் மான்ய சாசனன் மனூபமன் மார்த்தித வீரன்
78 கிறிஸ்திரன் கீதி கின்னரன் க்ரிபாலயன் க்ரிதாப தானன்

79 கலிப்பகை கண்டக நிஷ்டுரன்
கார்ய தத்ஷிணன் கார்முக பார்த்தன்
80 பராந்தகன் பண்டித வத்ஸலன் பரிபூர்ண்ணன் பாப பீரு
81 குரை உறு கடற்படைத்தானை குண கரிஷ்யன் கூட நிர்ண்ணயன்
நிரைஉறு மலர்மணி நீண்முடி நேரியர் கோன் நெடுஞ்சடையன்
82 மற்றவன்தன் ராஜ்ய வத்ஸரம் மூன்றுவது செலா நிற்ப
ஆங்கொருநாள்—

கொடைச் செய்தி

83 மாடமாமதிற் கூடற் பாடுநின்றவர் ஆக்ரோதிக்கக்
84 கொற்றவனே மற்றவரைத் தெற்றென நன்குகூவி,
85 'என்னேய் நுங் குறை' என்று முன்னுகப் பணித்தருள,
86 "மேல் நாள் நின் குரவராற் பான் முறையின் வழுவாமை
87 மாகந்தோய் மலர்ச்சோலைப் பாகனூர் கூற்றத்துப் படுவது;
88 ஆள்வ தானை அடல் வேந்தேய்!
வேள்விகுடி என்னும் பியருடையது
89 ஒல்காத வேற்றானையொடு ஓதவேலி உடன் காத்த
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பரமேஸ்வரனாற்
90 வேள்வி குடி என்னப்பட்டது கேள்வியில் தரப்பட்டதனைத்
91 துளக்கம் இல்லாக் கடற்றானையாய்!
களப்ரரால் இறக்கப் பட்டது"
92 என்று நின்றவன் விஜ்ஞாப்யஞ் செய்ய,
'நன்று! நன்று!' என்று முறுவலித்து
93 'நாட்டால் நின் பழமையாதல் காட்டி நீ கொள்க' என்ன
நாட்டால் தன் பழமை யாதல் காட்டினன் அங்கப்பொழுதேய் காட்ட,
94 'மேனாள் எங்குரவாராற் பான் முறையிற் றரப்பட்டதை
95 'எம்பாலுந் தரப்பட்டது' என்று செம்மாந்து அவன் எடுத்தருளி
96 விற்கைத் தடக்கை விறல் வேந்தன்
கொற்கை கிழான் காமக்காணி நற்சிங்கற்குத்
97 தேரோடுங் கடற்றானையான் நீரோட்டிக் கொடுத்தமையின்,

எல்லை

98 மற்றிதற்குப் பெருநான்கெல்லை தெற்றென விரித்து உரைப்பின்

99 புகரரு பொழின் மருங்கு உடுத்த நகரூர் எல்லைக்கும் மேற்கும்
100 மற்றிதற்குத் தென் எல்லை,
101 குளந்தைவங் கூழ்வந்தை செய்க்குங்
களந்தைக் குளத்தில் ஆலுக்கு வடக்கும்,
102 மற்றிதற்கு மேல் எல்லை,
103 அற்றம் இல்லாக்கொற்றன் புத்தூர் ஒடுமைய்
104 இருப்பைச் செய்யிடை மேற்றலைப் பெருப்பிற்குக் கிழக்கும்,
105 மற்றிதற்கு வடபால் எல்லை,
106 காயலுட் கமலம் மலரும்
பாயலுள் வடபாலைப் பெருப்பிற்குத் தெற்கும்,

உரிமை வழங்கல்

107 இவ்வியைத்த பெருநான்கு எல்லையிற் பட்டபூமி காராண்மை,
மீயாட்சி உள்ளடங்க மேல் எங்குரவராற் குடுக்கப்பட்ட பரிசேய்
எம்மாலுங் கொடுக்கப்பட்டது.

•

ஆணத்தி

மாறங் காரி

108 மற்றிதற்கு ஆணத்தி குற்றமின்றிக் கூறுங்காலை
109 கொங்கரவந் நறுங் கண்ணிக் கங்கராஜனது கந்யா ரத்னம்
கொங்கர் கோற்குக் குணர்ந்து கொடுப்ப
110 ஆர்ப்பரு அடற்றானைப் பூர்வ்வராஜர் புகன்றெழுந்து
111 வில் விரவுங் கடற்றானைப் வல்லபனை வெண்பைவாய்
112 ஆள் அமருள் அழிந்தோட வாள் அமருள் உடன் வவ்விய
113 ஏனப்பொறி இகல் அமருள் இடியுரும் என வலன் ஏந்த
மலைத்த தானை மதவிகலன் மன்னர் கோன் அருளிற் பெற்றுங்
114 கொல் வளைக்கும் வேற்றானைப் பல்வளைக்கோன் குணரப்பட்டு
115 பொர வந்தவர் மதம் தவிர்க்கும்
கரவந்தபுரத்தவர் குலத் தோன்றல்
116 மாவேந்துங் கடற்றானை மூவேந்த மங்கலப் பேரரையனாகிய
117 வைத்ய சிகாமணி மாறங்காரி
118 இப்பிரமதேயம் உடைய கொற்கைக் கிழான் காமக் காணி
சுவரஞ் சிங்கன்

இதனுள் மூன்றில் ஒன்றுந் தனக்கு வைத்து, இரண்டு கூறும் ஐம்பதினவர் ப்ராஹமணர்க்கு நீரோடு அட்டிக் கொடுத்தான்.

119 இதனுள் மூர்த்தி எயினன் சவையோடு ஒத்தது
நான்கரைப் படாகாரம் உடையன.

120 இதனுள் தனக்கு வைத்த ஒரு கூற்றிலும்
தம்பிமார்க்கு நான்கும், தம் சிற்றப்பனுர் மக்களுக்கு ஆறும்,
சபையோடு ஒத்த படாகாரங் கொடுத்தான்.

121 இப்பிரசஸ்தி பாடின சேனதிபதி ஏனதி ஆயின சாத்தஞ் சாத்தற்கு
மூன்று கூற்ருருமாய்த் தங்களோடு ஒத்த நான்குப் படாகாரங் கொடுத்தார்.

122 "மாற்றிதனைக் காத்தார் மலரடி என் முடி மேல" என்று
கொற்றவனேய் பணித்தருளித்
தெற்றெனத் தாம்ர சாசனஞ் செய்வித்தான்.

123 இய்த்தெழுதின சுத்த கேசரிப் பெரும்பணைக் காரனுக்குப்
பெருமக்கள் அருளாற் பெற்றது,
ஒரு இல்லவளாவும், இரண்டு மாச் செய்யும்,
ஒரு புன்செய்யும் பெற்ருன்.

124 இவை யுத்த கேசரிப் பெரும்பணைக்காரன் எழுத்து,

தமிழ் வினை முற்று

(மா. இளையபெருமாள் எம். ஏ; எம். லிட்)

1. செய்யும் என்னும் முற்று, வியங்கோள் வினைமுற்று போன்றவை தவிரப் பெரும்பான்மைத் தெரிநிலை வினை முற்றுகள், குறிப்பு வினை முற்றுகள் ஆகியவற்றின் ஈற்றில் இடம் பால் குறிக்கும் விதிகள் காணப்படுகின்றன.

2. அவ்வினை முற்றுகள் வினையாலணையும் பெயர்களாக உரு மாருமல் பயன்படுத்தப்படுகின்றன.

3. குறிப்பு வினை முற்றுக்களில் ஒரு பகுதியின் பாற் பட்டவற்றின் முதனிலைகளாக நிற்கும் பெயர்களோடு தொடர்புடைய பொருள்களின் பிரதிநிதியாக விகுதிகள் அமைகின்றன. சான்ருக 'நாடன்' என்னும் சொல்லின் பகுதியாகிய "நாட்டில்" வாழ்பவனையோ, அதனை ஆள்ப வனையோ 'அன்' குறிக்கின்றது.

4. குறிப்பு வினை முற்றின் பண்புப்பகுதிகளையும் பண்புப்பெயர்களாக இலக்கண ஆசிரியர்கள் கொண்டனர் என்பதற்கு 'ஈறுபோதல்' என்று தொடங்கும் நன்னூல் சூத்திரம் சான்ருகும். எனவே பெரியள் என்பதைப் பெருமை+அள் எனப் பிரித்துப் பெருமைக்கும் 'அள்' என் பதால் குறிக்கப்படும் பெண்ணுக்கும் உள்ள தொடர்பை 'உடைமை' எனக் கொள்ளலாம். இவள் கண் பெரியள். நங்கை நிறம் கரியள், நங்கை மூக்கு நல்லள், கோடு கூரிது கரி, குளம்பு கூரிது குதிரை முதலிய வாக்கியங்களில், அத் தொடர்பின் பல்வேறு நிலைகளைக் குறிப்பால் உணர்த்தும் குறிப்பு வினை முற்றுக்களைக் காண்கிறோம்.

5. இருபெயரொட்டின் எதிர்மறையைக் குறிக்கும் ''அல்'' என்பதை முதனிலையாக உடைய அல்லன், அல்லள் போன்ற குறிப்புவினை முற்றுகள் ஒவ்வொன்றும் ஒருவினைப் படாத இரண்டு எழுவாய்களைத் தவிர்க்கமுடியாத நிலையில் ஏற்கும்தன்மையுடையன. உதாரணம்; மகன் குற்றி அல்லன்.

6. அஞ்சலம், அமையலென், அறியலன், கழறலிர், பிரியலன் போன்ற சொற்களையும் இங்கு கருத வேண்டும். செல்லலன் என்பதைச் செல்வான் அலலன் என்றோ சென்றான் அல்லன் என்றோ பொருள் கொள்ள வேண்டும் என்பதை எள்குவளல்லள், ஆகுவதன்று, வாட்டுநரல்லர், கறுக்குநவல்ல, அமைகுவானல்லன், வாடுவையல்லை, உள்ளி உள்ளினெனல்லனே, அறிந்தனிரல்லிரோ, ஒத்தனெமல்லேம், சென்றதன்றோ முதலிய சங்க இலக்கியச்சான்றுகள் ஆதரிக்கின்றன.

7. உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்றுகளுக்கும் மேற்கூறிய இயல்புகள் பொருந்தும். நெகிழ்ந்தாள் என்ற வினைமுற்றில் நெகிழ்தல் தொழில், இறந்த காலம், பெண் பாலைக்குறிக்கும் 'ஆள்' விகுதி ஆகியன காணப்படுகின்றன இறந்த கால நெகிழ்தல் தொழிலோடு தொடர்புடைய பெண் இச்சொல்லால் குறிக்கப்படுகிறாள். குறிப்பு வினை முற்றைப் போலவே தெரிநிலை வினைமுற்றின் விகுதியால் குறிக்கப்படும் பெயர்கள், எப்போதும் 'செய்பவனா'கவே அமையவேண்டும் என்ற நியதி இல்லை. இவள் கண் பெரியள் என்னும் வாக்கியத்தைப்போல இவள் வளை நெகிழ்ந்தாள் என்பதும் தமிழில் இயல்பான எளிய வாக்கியமாகும் இவ் வாக்கியங்களில் அள், ஆள் ஆகிய விகுதிகளால் குறிக்கப் படும் 'இவள்' நெகிழ்தல் தொழிலின் கர்த்தாவாக அல்லாது அதனை உடையளாகக் குறிக்கப்படுகிறாள். மங்கை கண் நொந்தாள். இவை குறிஞ்சி வந்தன முதலிய வாக்கியங்

களும் இவ்வகை அமைப்பைக் கொண்டன. புறநானூற்றில் காணப்படும் ஆகுந்து, ஆருந்து, இரியுந்து, உகளுந்து, உறைக்குந்து, ஒலிக்குந்து ஒப்புந்து, கறக்குங்கு, சேர்க்குந்து, தாங்குந்து, தூங்குந்து, பறிக்குந்து, பாயுந்து, பூக்குந்து, பெயர்க்குந்து முதலியன இவ்வமைப்பைக் கொண்ட ஒன்றன்பாற் சொற்களாகும். இச்சொற்களின் 'து' விகுதி, முதனிலையாகிய தொழில்நிகழும் இடத்தைக் குறிக்கின்றன.

8 எனவே பண்டைத் தமிழ்நடையின் வாக்கியம், செய்பவன்-செயல் என்னும் முறையில் அமையாது, இரு பெயரொட்டாக நிற்கும் பெயர்களின் தொடராக அமைந்து அவற்றின் செயலையும் பண்பையும் விளக்குகின்றது என்பதை மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளை 150-வது ஆண்டு நிறைவு விழா.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவதரித்த தமிழ்க் கவிஞர்களுள் மிகச் சிறந்தவரான திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ பிள்ளை அவர்கள் 22 புராணங்கள், 6 காப்பியங்கள், 45 பிரபந்தங்கள், அளவிறந்த தனிப்பாடல்கள் ஆகியவற்றை இயற்றியுள்ளார்கள். இவற்றோடு மாணவர்களுக்குப் பாடம் போதிப்பதிலும் இவர் இணையற்றவராக விளங்கினர். "எங்கெங்கே தமிழ் நூல்களை முறையாகப் படித்தறியும் உணர்வும் பழைய புராணங்கள் பிரபந்தங்கள் முதலியவற்றைப் பயின்று இன்புறும் இயல்பும் திகழ்கின்றனவோ அங்கெல்லாம் இவருடைய தொடர்பேனும் இவர்பாற் பாடங்கேட்டவர்களுடைய தொடர்பேனும் பெரும்பாலும் இருக்கும். இன்றும் ஓரளவில் புலவர்களுடைய நூல்களின்பால் உள்ள மதிப்புக்கு மூலகாரணம் இவரென்றே சொல்லலாம்.

அத்தகைய பெரியாரின் 150-ஆவது ஆண்டு நிறைவு 6-4-1965 அன்று நிகழவிருக்கின்றது. அந் நன்னாளைத் தமிழகம் முழுமையும் உள்ள தமிழன்பர்கள் பயனுறக் கொண்டாடுதற்குரிய ஆலோசனைகளை அன்பு கூர்ந்து இந் நூல் நிலையத்திற்கு தெரிவித்தால், வந்தனத்துடன் ஏற்றுச் செயலாற்றலாகும்.

அமைச்சர்,
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்,
திருவான்மியூர், சென்னை-41.

மதிப்புரை

[நூல்:— தமிழ்மொழிச் சிந்தனைகள்; ஆசிரியர்: மா. இளையபெருமாள், எம். ஏ. எம். லிட்., கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம். விலை ரூபாய். 2.]

தமிழ் மொழிச் சிந்தனைகள் என்னும் இந் நூல் தமிழ் மொழியின் நுண்ணிய மொழியமைப்பை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் போன்ற இலக்கண ஆசிரியர்கள் எவ்வாறு ஆராய்ந்து கண்டிருக்கிறார்கள் என்பதை கட்டுரைகளின் வடிவில் விளக்குவதாகும். அறிவியல் பூர்வமாகச் சொற்களை எடுத்துக்கொண்டு அதன் தன்மையையும் மூலத்தையும் கண்டுசொல்வதும்,பல்வேறு கோணங்களில் நின்று ஆராய்வதும், இனிய, எளிய நடை நடையில் எழுதியுள்ளதும், புரியும்படி சொல்லியுள்ளதும் பாராட்டுதற்குரியது வளர்ந்துவரும் மொழியில் துறைக்குப் புதிய புதிய எண்ணங்களும் வடிவும்தேவை, அதனை ஆசிரியரின் நடையிலும் சொல்லிலும் காணமுடிகிறது. உரையாசிரியர்களின் உரையில் மயங்கிககிடக்கும் நமக்கு சில துணிபான முடிவுகளை 'வாரய்! நீ வாராய்' 'தில்லைச் சொல்லும் விழைவுப்பொருளும்' 'குறிப்பு வினை முற்றும் பெயரும்' 'இகர யகரப் போலி' என்பன போன்ற பல கட்டுரைகளில் காண முடிகிறது. இதில்மொத்தம் இதுபோன்று இருபத்து ஐந்து கட்டுரைகள் இருக்கின்றன. இலக்கண ஆய்வாளர்களும் பிறரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய கருத்துக்களும், சிந்திக்கவேண்டிய கருத்துக்களும், மேலும் ஆராய்வதற்குரிய கருத்துக்களுமாகநிறைந்து ஆராய்ச்சி அறிவினைக் கிளறிவிடுகிறது. மனித அறிவினைத் தூண்டுகின்ற பல ஆக்கபூர்வமான இலக்கண இலக்கியங்கள் தேவையென்பதை இந்நூல் இலக்கண வழிநின்று நிறைவு செய்கிறது. படித்துப்பாருங்கள். பயன் தெரியும்.

ஆசிரியருக்குக் கடிதம்

அன்புடையீர்,

''செந்தமிழை'' நேரம் வாய்த்தபோதெல்லாம் படிக்கின்றவன் நான். சில கட்டுரைகள் நன்ருக அமைந்துள்ளன சர். பி.டி. இராஜன் திருவனந்தை வந்திருந்தபோது செந்தமிழின் நல்ல அம்சங்களைப் பாராட்டி மேலும் திருந்துவதற்கு உரிய முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்று வேண்டிக்கொண்டேன். ஆங்கிலப் படிப்பும் நாணயமும் அரசியல் செல்வாக்கும் உடைய ஒரு பெரியார் தமிழ்ச்சங்கத்தின் தலைவராகக் கிடைத்தது பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். எனவே தமிழன்பர்கள், ஆசிரியர்கள், அனைவரும் சேர்ந்து தமிழ்ச்சங்கத்தைப் பலப்படுத்துவதற்கும் அதன் சஞ்சிகையான 'செந்தமிழைப்' பிரபலப்படுத்துவதற்கும் முயலவேண்டும். கி. ஆ. பெ. விசுவனுதனுரின் கழகம், காரைக்குடி கழகம், உலக தமிழ்க்கழகம் என்றெல்லாம் பல நிறுவனங்களைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாக பழமையும் சிறப்பும் உடைய மதுரைத் தமிழ்ச் சங்கத்தைச் சீர்படுத்திப் புகழடையச்செய்வது மிக இன்றியமையாதது.

வறுமை இழுக்கன்று ஆனல் வறுமையை நீக்க முயலாமை இழுக்கு. அதனை மறைப்பது அதனைவிட இழுக்கு. தமிழன்பர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும், தமிழ்ச் சங்கம் வளர்வடைவதற்கு ஒரு திட்டம் தீட்டிப் பணம் கோருக. தமிகத்தில் எழுத்தாளர்களாகவும் ஆராய்ச்சியாளர்களாகவும் உள்ளவர்களிடம் கட்டுரை கோருக.பழைய பொருள்களில்மட்டும் கட்டுரை அமையாமல், மொழிப் பிரச்னை, கலைச்சொற்கள், வெளியாகும் தமிழ் ஆங்கில நூல்களின் விமர்சனம், பிறமொழி இலக்கியச்சிறப்பு முதலியவை பற்றியும் கட்டுரை கோருக. நான் சிறுவனுக இருக்குப்போது செந்தமிழ் படியாத தமிழ்ப் புலவனைக் கண்டதில்லை. அந்த நிலையை குறைந்தது மூன்றுண்டுகளுக்குள் நீங்கள்தோற்றுவிக்க வேண்டும். அதற்கான எல்லா முயற்சிக்கும் என் ஆதரவுண்டு.

இங்ஙனம்,

வி. ஐ. சுப்பிரமணியம் எம்.ஏ.பி.எச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், கேரளப் பல்கலைக்கழகம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ	
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக் கலம்பகம்	—	0	6	0
13.	கல்லைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கனுநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	8	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சன தீபிகை	—	0	12	0
18.	இயற்கைப் பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகை திருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக் கட்டளை	—	0	3	0
32.	மனீஷாபஞ்சகம்	—	0	8	0
33.	உவமான சங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை		0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6
42.	அகராதி நிகண்டு	—	0	12
43.	மேகவிடு தூது	—	0	2
44.	திருக்குற்றாலமாலை	—	0	2
45.	தண்டலையார் சதகம்	—	0	4
46.	இராமோதந்தம்	—	0	3
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6
49.	கூடற்புராணம்	—	0	10
50.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6
51.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4
52.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12
53.	பாப்பாவினம்	—	0	10
54.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5
55.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	8
56.	கடம்பர் கோயில் உலா	—	0	6
57.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6
58.	கலைசைக்கோவை	—	0	12
59.	பெருந்தொகை	—	5	0
60.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5
61.	சிராமலைக்கோவை	—	0	12
62.	மத்யவியாயோகம்	—	0	2
63.	அமிர்தரஞ்ஜநி	—	0	2
64.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8
65.	திருச்சிறுபுலியூருலா	—	0	12
66.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10
67.	மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்	—	2	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 59 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7. 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்பு புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

இவ்விதம், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.